செய்தி வெளியீடு எண்.138 நாள். 22.2.2008

# 4000 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டுக்கு 4 இலட்சம் கார் உற்பத்தி செய்யும் ரெனால்–நிசான் தொழிற்சாலை முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

தமிழக அமைச்சரவைக் கூட்டம் 8.2.2008 அன்று நடைபெற்றபொழுது 16 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் 5 புதிய பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

அந்த 5 தொழிற்சாலைகளில் ஒன்றாகிய ஒருங்கிணைந்த மோட்டார் வாகன உற்பத்தி தொழிற்சாலை சென்னைக்கு அருகில் ஒரகடத்தில் ரெனால் மற்றும் நிசான் நிறுவனத்தினால் தொடங்கப்படவிருக்கிறது. 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அமையவிருக்கும் இந்த புதிய கார் தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு 4 இலட்சம் கார்களை தயாரிக்கும். இந்த தொழிற்சாலையின் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏறத்தாழ 40 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இத்தொழிற்சாலையின் மொத்த முதலீடு 7 ஆண்டு காலத்தில் 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கும் கூடுதலாக அமையும்.

இத்தொழிற்சாலை நிறுவப்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று (22.2.2008) முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், தமிழக அரசுக்கும் ரெனால்டு மற்றும் நிசான் நிறுவனத்திற்குமிடையே கையெழுத்தாகியது.

தமிழகத்தில் மிகப் பெரிய தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக மகிந்திரா அண்ட் மகிந்திரா நிறுவனத்துடன் தனிப் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

ரெனால்டு மற்றும் நிசான் தொழிற்சாலை தமிழகத்தில் தொடங்கப்படுவதன்மூலம் சென்னை மாநகரும், தமிழகமும் தெற்காசியாவின் டெட்ராய்டு என ஏற்கனவே பெற்றுள்ள பெருமை மேலும் வலிமைபெறுகிறது. அத்துடன் மோட்டார் வாகன உற்பத்தியில் இணைப்பு மையமாகவும் இது திகழ்கிறது.

இத்திட்டம் மேலும் பல நாடுகளில் இருந்து குறிப்பாக, பிரான்ஸ் மற்றும் ஜப்பான்ஆகிய நாடுகளில் இருந்து தமிழகத்திற்கு நேரடி முதலீடுகளை ஈர்க்கும்.

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.